திரு. டி. என். முருகானந்தம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நவோதயா பள்ளிகளைப் பொறுத்த வரையில் தமிழ்நாடு அரசு அனைத்துக் கட்சிகளையும் கூட்டித் தமிழைப் பயிற்சி மொழியாக நவோதயா பள்ளிகளில் கொண்டு வர வேண்டுமென்ற கோரிக்கையை முன் வைப்பார்களா ? அதே கோரிக்கையை சட்டமன்றப் பேரவையில் தீர்மானமாக நிறை வேற்றி மத்திய அரசுக்கு அனுப்ப முன்வருவார்களா ?

Mr. SPEAKER. It is a policy matter. There is involvement of policy. (குறுக்கீடுகள்)

திரு. என். எஸ். வி. சித்தன் : பாலிசி இல்லை. அமைச்சர் பதிலளிக்கத் தயாராக இருக்கிறார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பாலிசி தான். அமருங்கள்.

திரு. எஸ். வேணுகோபால் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாயின்ட் ஆப் ஆர்டர் . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வி நேரத்தின்போது பாயின்ட் ஆப் ஆர்டர் கிடையாது. விதிகளை தயவுசெய்து இன்னொரு முறை படித்துப் பாருங்கள்.

திருச்சி-திருவரங்கம் இரயில் பாதையில் மேம்பாலம் கட்டுதல்.

9—*(வினா எண் 5137)—திரு. அ. மலர்மன்னன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருச்சி—திருவரங்கம் பாதையில் உள்ள இரயில்வே கிராசிங், பாலக்கரை இரயில்வே கிராசிங், தென்னூர் இரயில்வே கிராசிங் ஆகிய இடங்களில் மேம்பாலம் கட்ட அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு தலைவர் அவர்களே, இல்லை.

திரு. அ. மலர்மன்னன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் அதுபோன்ற செயற்குறிப்பு இல்லை என்று கூறினார்கள். ஆனால் திருச்சி போன்ற பெரு நகரங்களிலே இன்றைய தினம் உலக வங்கியிலே இருந்து பெறப் படுகிற தொகையிலிருந்து இந்தப் பாலங்கள் மேலும் சீர் செய்யப்படுவதாகச் சொல்கிறார்கள். எனவே உலக வங்கியி லிருந்து பெறப்படுகின்ற தொகையிலிருந்து அந்தப் பாலங்கள் செப்பனிடப்படுமா? புதிய பாலங்கள் அமைக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உலக வங்கியிலிருந்து பெறப்படுகின்ற நிதியின் மூலம் பீமன நகர், தென்னூர் ஆகிய 2 இடங்களில் மேம்பாலங்கள் கட்டுவதற்கு ஆய்வு நடந்து கொண்டிருக்கிறது. இதற்கு முன்னாலேயே உலக வங்கித் திட்டத்தின் மூலம் காந்தி லெவல் கிராசிங் ரோடில் ஒரு மேம்பாலம் கட்டுவதற்கான வேலை கள் நடந்து கொண்டிருக்கின்றன. கேள்வியிலே கேட்கப்பட் டிருக்கிற எந்தப் பாலமும் இப்போது பரிசீலனையில் இல்லை. அதைச் சேர்த்து பரிசீலிக்க முடியுமா என்று எதிர்காலத்திலே வேண்டுமானால் பார்க்கலாம்.

திரு. அ. மலர்மன்னன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் பதிலிலிருந்து தென்னூர் இரயில்வே கிராசிங்கிலும், பாலக்கரை இரயில்வே கிராசிங்கி லும் பாலங்கள் கட்ட இருப்பதாக அறிகிறேன். ஆகவே, தென்னூர், பாலக்கரை போன்ற லெவல் கிராசிங்கில் பாலங்கள் கட்டுகிற நேரத்திலே, அங்கேயிருக்கிற பெரிய கட்டிடதாரர் கள், உரிமையாளர்கள் கோர்ட்டுக்குச் சென்று ஸ்டே வாங்காத நிலையிலே இந்தத் திட்டம் செயல்படுத்தப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, அந்தப் பாலம் கட்டுவது என்றால் முறையாகக் கட்டப்பட வேண்டும். அதற்கு எவ்வளவு இடம் தேவையோ அந்த இடத்தை நாம் ஆர்ஜிதம் செய்தே ஆக வேண்டும். அந்த நிலைமையிலே அங்கேயிருக்கிற கட்டிடதாரர்கள் கோர்ட்டுக்குப் போகாமல் இருக்க எப்படி நடவடிக்கை எடுப்பது என்று தெரிய வில்லை. ஆனால், அந்தப் பகுதியிலே இருக்கிற சட்டமன்ற உறுப்பினர்கள், நகராட்சி மன்ற உறுப்பினர்கள், அவர்களைப் பார்த்து, இது ஒரு நல்ல காரியம், ஆகவே கோர்ட்டுக்குப் போக வேண்டாம் என்று எங்களோடு சேர்ந்து ஏதாவது செய்தால் அது சரியாக இருக்கும் என்று கருதுகிறேன்.